பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 15] சென்னை: புரட்டாசி 17ஆ (3—10—67) செவ்வாய் ★ வெளியூர்: புரட்டாசி 18ஆ (4—10—67) புதன் [இதழ்: 92

தென் சென்னை காங்கிரசு வேட்பாளர்

சி. ஆர். இராமசாமி பெயர் அறிவிப்பு

சென்னை, அக். 3—

தென் சென்னைத் தொகுதியில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடக் காங்கிரசுக் கட்சி, தனது வேட்பாளராக சி. ஆர். இராமசாமியின் பெயரை அறிவித்துள்ளது.

"முன்னாள் மத்திய அமைச்சரான திரு. சி. ஆர். பட்டாபிராமன் போட்டியிடுவார்" என்று இது வரை பேசப்பட்டு வந்தது தெரிந்ததே.

திரு. சி. ஆர். இராமசாமி, 1962 பொதுத் தேர்தலில் இதே தென் சென்னைத் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிட்டு, நமது கழக வேட்பாளர் நாஞ்சில் கி. மனோகரனிடம் தோற்றவர் என்பதை குறிப்பிடத்தக்கது.

சென்ற பொதுத் தேர்தலில் அண்ணாவைத் தோற்கடித்துக் காட்டுவதாக ஆர வாரத்துடன் போட்டியிட்ட 'சூரமூர்த்தியின் 'கதி' என்ன என்பது புரிய வில்லை!

தி. மு. க.

தலைமைச் செயற்குழு--பொதுக்குழுக் கூட்டங்கள்

★

1967 அக்டோபர் 14, 15 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் தி. மு. க. தலைமைச் செயற்குழு—பொதுக் குழுக் கூட்டங்கள், சென்னை—தியாகராயநகர், அபிபுல்லா ரோடு, 11/1 எண்ணுள்ள எஸ். ஜி. எஸ். சபா திருமண மண்டபத்தில் நடைபெறும்.

செயற்குழுக் கூட்டம் 1967 அக்டோபர் 14-ஆம் நாள் சனிக்கிழமை காலை 9-மணிக்குத் துவங்கி பிற்பகல் வரை நடைபெறும்.

பொதுக்குழு 14-ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்குத் துவங்கி அன்றும், தொடர்ந்து மறுநாள் (அக். 15) ஞாயிறன்றும் நடைபெறும்.

மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர் படும் துயரம்

தலைமை அமைச்சர் நிதியிலிருந்து உதவியளிக்க அண்ணா கோரிக்கை

புதுடில்லி, அக். 1—

"பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட ஆலைகளை மீண்டும் இயங்கச் செய்வதற்குத் தலைமையமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டும்" என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு வலியுறுத்தினார்கள்.

"நெசவாலைகள் மூடப்பட்டுள்ளதன் விளைவாக வேலை இழந்திருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் துயரம், வெள்ளத்தாலோ, புயலினாலோ ஏற்படக்கூடிய துயரத்திற்கு ஒப்பானதேயாகும்" என்றார் அண்ணா.

இங்கு, மத்திய வணிகத்துறை அமைச்சர் தினேஷ் சிங்கைச் சந்தித்தபோது அண்ணா இக் கருத்தை வெளியிட்டார்.

"இயற்கைக் கோளாறினால் வினையும் துயரங்களுக்கு உதவி வழங்கவே தலைமையமைச்சரின் நிவாரண நிதி இருக்கிறது" என்று தினேஷ் சிங் கூறினார்.

"இயற்கை வினைவிக்கும் துன்பங்களுக்கு ஈடானதே பஞ்சாலைத் தொழிலாளர்கட்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்" என்பதை அண்ணா எடுத்துக்காட்டியதும் தினேஷ் சிங் எதுவும் பதிலளிக்க இயல வில்லை.

"இது குறித்து, தலைமையமைச்சருடன் தமிழக முதலமைச்சர் பேசலாம்" என்றார் தினேஷ் சிங்.

'இந்தியைத் திணித்தால் கடும் விளைவுகளைச் சந்திப்பீர்'

அறிஞர் அண்ணா எச்சரிக்கை

புதுடில்லி, செப். 30—

"தென்னகத்தின் இணைப்பு மொழியாக இந்தியைத் தினிக்க இந்தி ஆதரவாளர்கள் எடுக்கும் வெறித்தனமான முயற்சி எதுவும் கடும் விளைவுகளுடன் எதிர்க்கப்படும்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் எச்சரிக்கை செய்தார்.

அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"ஆங்கிலம், இந்தி இரண்டுமே ஆட்சிமொழிகள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் சட்டத்துக்கே திருத்தம் கொணரப்பட வேண்டும். இது ஒன்றுதான் மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வாக இருக்கமுடியும். இதை விட்டு குறிந்த எதுவும் தென்னாட்டு மக்களுக்கு—குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்களுக்கு மன நிறைவைத் தராது.

"இப்போது வகுக்கப்பட்டுவரும் ஆட்சி மொழி மசோதா ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே நிறைவளிக்கலாம்; தி. மு. கழகத்தையும் மாணவர் சமுதாயத்தையும் அது திருப்திப்படுத்தாது. "வட்டார மொழிகளின் பெயரால் இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணிக்க முயற்சி நடக்கிறது என்ற அச்சம் இருக்கத்தான் செய்கிறது. இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழிதான் என்று அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டால் வட்டார மொழிகள் பல்கிக் கழகப் பாட மொழியாவது பற்றி எழுந்துள்ள அச்சம் விலகும்.

"இன்னும் நீண்ட காலத்துக்கு ஆங்கிலம் முக்கியமான பங்கை வகித்துவரப் போகிறது. இதை உணராத அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் உள்ள மொழிகளின் பட்டியலில் ஆங்கிலத்தையும் சேர்த்திடல் வேண்டும்."

சட்டகர் வாய்க்கே சர்க்கரை என்றுல்...!

★

"'தமிழகத்தில் விஷக் கிருமிகள் பரவியுள்ளன' என்று பக்தவத்சலம் அப்போது சொன்னார்; அதை அவர்கள் ஆட்சேபித்தார்கள்; ஆனால் அது இப்போது உண்மையாகிவிட்டது. அப்படிச் சொன்னவர் வாய்க்கு ஆளுக்கு ஒரு பிடி சர்க்கரை போடலாம்."

—நியாகராயநகர் தொகுதி
காங்கிரசு மாநாட்டில் ஓ.வி. அழகேசன்

அழகேசனுக்குப் பக்தவத்சலம் சட்டகர் உறவு முறை; சட்டகர்களுக்குச் சர்க்கரை பரிமாறிக்கொள்வதில் மற்றவர்களுக்கு ஆட்சேபம் இல்லை!

பொதுவாக, வாய்க்கு சர்க்கரை போட்டுக்கொள்வது வேறெரு காரணத்துக்காகவும் உண்டு; கசப்பானவற்றைச் சாப்பிட்டால்—கண்டதை உண்டு வாந்தியெடுத்தால் அதற்காகவும் சர்க்கரையைப் போட்டுக் கொள்வார்கள்!

எனவே, சட்டகர், வாய் 'பழுது'பட்டிருப்பதை இப்படி மறைமுகமாக—அரசியல் பேச்சை சாதனமாக்கிக் கொண்டு—அழகேசன் 'குத்திக்' காட்டுகிறாரோ என்னவோ!

அப்படியே பக்தவத்சலம் கூறியது சரியானதாக வாக்கு தான் என்றால்,

தமிழகத்தில்
நல்ல ஆட்சி நடைபெறுவதாக---
பொது அமைதி நிலவுவதாக---
முன்னிலும் பன்மடங்கு நேர்மை,
நிர்வாகத் திறமை இருப்பதாக---
கூறுபவர்களும்
ஜெயப்பிரகாஷ் நாராயணன்—இந்திராகாந்தி—வி.வி. கிரி—பிரம்மானந்த ரெட்டி—மத்திய அமைச்சர்கள்—மற்றைய மாநிலத் தலைவர்கள்—அரசியல் கட்சி நடத்துவோர்—அயல் நாட்டு ஏடுகள்—உள்நாட்டு இதழ்கள்—
ஆகியோருக்கெல்லாம் சர்க்கரையைப் போடாமல் எதைப்போடுவது?

அதற்கும் அவரது கட்சி ஆளும் மத்திய அரசிடம் கேட்டு சற்று அதிகப்படியான சர்க்கரையை அழகேசன் வருவித்துத் தரட்டும்!

—'பாக்சர்'

தனி உணவு மண்டலம் என்பது தேசியக் கொள்கையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது—புதுடில்லியிலே கூடிய உணவு — முதலமைச்சர்கள் மாநாட்டில்!

ஆனால் அங்கே பேசிய பிகார் முதலமைச்சர் மகாமாய பிரசாத் சின்கா, 'தனி உணவு மண்டலக் கொள்கையை ரத்து செய்யவில்லையென்றால் எனது மாநிலத்திலிருந்து எந்த ஒரு மாநிலத்துக்கும் செல்லும் தானும் பொருள் வகைகளைத் தடுத்து நிறுத்தி விடுவேன்' என எச்சரித்திருக்கிறார்!

பயங்கரமான உதாரணத்தைக் கூறுவதாக என்மீது யாரும் கோபப்படக்கூடாது!

ஒவ்வொரு தடவையும் பிரச்சினை எழும்போதெல்லாம், எதிர்த்து அதிபர் 'சூயல் கால்' வரலை முடிவிடுவேன்' என்று கூறுவதற்கும்—முதலமைச்சர்கள் மாநாட்டிலேயே—மத்திய அமைச்சர்கள் முன்னிலையே மகாமாய பிரசாத் இப்படிப் பேசியிருப்பதற்கும், அடிப்படையில் வேறுபாடு இருக்கிறதென்று நினைக்கிறீர்கள்?

எங்கிருந்து எப்படி உருவாகும் தேசம்—தேசியம்—தேசியக் கொள்கை?

★

ஊரெல்லாம் தூங்கும் போது, அந்தப் பறவை விழித்திருக்கும்! ஊர் இயங்கும்போதோ, அந்தப் பறவை தூங்கும்!

அதற்குப் பெயர் 'ஆந்தை'! சொல்லும்போதுகூடச் சிலர், முகம் சுளிப்பார்கள்! அத்தகைய அருவருப்பு -- அதன் மீது!

கழகம் ஆளுவதால் மக்கள் அரசியலில் தூய்மையிட்டதாகக் காமராசர் கருதிப் பேசியிருக்கிறார்; அதவது, இந்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் விழித்துக்கொள் வார்களாம்!

அவர் கருத்துப்படி, 1967-ல் வாக்காளர்கள் கண்ணயர்ந்து விட்டார்கள்!

1962-லும் அதற்கு முன்பும் விழித்துக்கொண்டிருந்தார்கள்; அதனால்தான் காங்கிரசும் ஜெயித்துக்கொண்டே இருந்தது!

1972-ல் இடையில் ஏற்பட்டிருக்கும் தூக்கம் கலைந்துமிடுமாம்!

என்னுல் 'பறவை'யைக் கூறிவிட்டு, இப்போது இப்படி முடிக்கிறேனே என்று யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது!

இந்தப் பிரச்சினைபில் தூங்கியது யார்? மக்களா—காமராசரா?

அல்லது, இப்படிச் சொல்லலாம்: என்று நினைக்கிறேன்; மக்கள் விழித்துக்கொண்டிருக்கும்போதுதான் காமராசர் தூங்கிக்கொண்டிருந்திருக்க வேண்டும்! காமராசர் 'முழி'த்துக்கொண்டிருக்கும்போது, மக்கள் உறக்கத்தில் இருந்திருக்க வேண்டும்!

'மனித' இயற்கையைக் காமராசர் குறைகூறலாமோ!

அவரை நொந்துகொள்வதில் பொருத்தம் இல்லை தான்!

—எஸ். ஆர்.

காந்தி வழியில் கழக ஆட்சி!

காந்தியார் கருத்து	கழகத்தின் வழிமுறை
★ கள், சாராயம், அபின் போன்ற மக்களுக்குத் தீங்கு விளைக்கும் பொருள்களைச் செய்கிற தொழில்களை அனுமதிப்பதில், அரசாங்கம் பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொள்ளக் கூடாது. மக்களுக்குப் பயன் படுவதற்காக மருந்து முதலிய வற்றுக்குத் தேவையான அளவு அவற்றை உற்பத்தி செய்யலாம்.	★ காந்தி வழி காங்கிரசுக்காரர்களே மற்ற மாநிலங்களில் வருவாய் கருதி மதுவிலக்கை நீக்கிவிட்ட சாதகமான சூழ் நிலையிலும், மதுவிலக்கை நீக்கினால் சுமார் ரூ. 18—20 கோடி வருமானம் கிடைக்கிற நில இருந்தும், தமிழக அரசு மதுவிலக்கில் இன்னும் உறுதியாய் இருக்கிறது!
★ தூற்றுக்கணக்கான ஆண்டுகள் கொடுமைக்குள்ளாகி, உயர் பண்பு மேவிய மற்றவர்களின் தொடர்பும் சேர்க்கையும் இன்றி வாழும் நீண்டாதார் நிலை, மேலும் மேலும் இழிவு பெற்று வருகிறது. அவர்களைக் கைதூக்கி மற்றவர்களோடு சேர்த்து வைக்கும் பொறுப்பு, 'உயர்ந்தோர்' என்று சொல்லிக்கொள்வோர்களே—அவர்களுக்கு உண்டு.	★ கலப்பு மணத்தை ஆதரித்தும், அப்படி மணம் புரிவோருக்குத் தங்கப் பதக்கம் வழங்கி ஊக்கு வித்தும் தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிடுகிறது!
★ சட்டத்தையும் அதிகாரிகளையும் எதிர்பார்த்துக்கொண்டிராமல், நாட்டின் பல அடிக்க வேலைகளையும் தாமாகவே முன்வந்து ஆக்கித்தரவாகச் செய்துகொள்ளும்படி மக்களுக்குப் போதிக்க வேண்டும்; அதற்காகச் சேவை மனப்பான்மையோடு தம்மை அர்ப்பணிக்கும் தொண்டர் அணிகள் அமைய வேண்டும்.	★ அதுதான் தமிழக அரசு அமைத்து ஊரூர்ப் பள்ளியைக் கட்டிய சீரணி.
★ நாட்டின் பேரிலும் இராணுவமும் குடிமக்களே அச்சுறுத்தித் துன்புறுத்தினால் அவர்களே கொள்ளைக்காரர்கள்! அரசு அவர்களே ஆதரிக்குமானால் அது கொள்ளைக்காரரின் அரசு ஆகும்!	★ காவல்துறையில் ஒரு மாறுதல் செய்து, நிலைமை கட்டுமீறிப் போகுமபோது மட்டுமே அவர்கள் தலையிடவும், தொழிலாளர் பிரச்னைகளில்—அரசியல் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களில் தேவையின்றிப் போலீசு தலையிட்டுத் தடை செய்யாமலும் தமிழக அரசு கவனித்துக் கொள்கிறது!

[காந்தி கொள்கைகளை மேலே காட்டப்பட்டகை காந்தியாரின் நெருங்கிய தோழரும் அறிவாளருமான நிகோலஸ் மஷ்ருவாலா என்பவர் எழுதி—காந்தி நினைவின் 25—5—1935 நேரி மகசெழுத்திட்ட ஒப்புதலுடன் வெளியிடப்பட்ட 'வினர நோஹ்ன' என்ற நூலின் மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டவை]

காந்தி வழியில் கழகம் ஆட்சி செய்யும் மாட்சிக்குச் சாட்சி நிற்பவை மேலே உள்ள எடுத்துக்காட்டுகள்!

இவை மட்டுமோ?

★ அமைச்சர்கள் சம்பளத்தைப் பாதியாக்கிக்கொண்டது!

★ பெரிய கார்களுக்குப் பதில் சிறிய கார்களே பயன்படுத்துவது!

★ சொந்த வீடு உள்ள அமைச்சர்கள் அரசினர் வளாகனைகளில் குடிபுகாதது!

★ 'அமைச்சர் ஓர் அற்புதப் பிறவியன்று; மக்களில் ஒருவரே' என்று நடந்துகொள்வது!

இப்படி எத்தனையோ!

இவ்வளவையும் காந்தியார் பெயர் சொல்லி எட்டு மாதங்கள் முந்திவரை ஆட்சி செய்த காங்கிரசு அரசுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்—காந்தி வழியில் கழக ஆட்சி நடைபெறுவது தெளிவாகும்.

வீட்டுக்கு வீடு வாயிற்படி:

மாநிலமெல்லாம் எல்லை ஓமே!

"மத்தியப் பிரதேசத்தைத் தவிர இந்தியாவின் எல்லா மாநிலங்களுமே எல்லையோர மாநிலங்களே!

"மத்தியப் பிரதேசம் மட்டுந்தான் இந்தியாவின் மற்ற மாநிலங்களினுல் சூழப்பட்டிருக்கிறது!

"ஏனைய எல்லா மாநிலங்களும் தரை எல்லையையோ கடல் எல்லையையோ ஒட்டித்தான் இருக்கின்றன!"

—இந்தியாவின் பாதுகாப்பு முக்கியத்துவம் குறித்து 'குட்ச்' பகுதிக்கு அகுில் 28-ந் தேதியன்று இங்திரா பேசியிருப்பதன் ஒரு பகுதி.

★ இராஜஸ்தான் பறவை! ★

பத்திரிகைக்காரர்களின் மொழியில் சொல்வதென்றால், அதற்கு 'சைட் லீட்' என்று பெயர்.

பாமரர்களின் வழக்கில் கூறவேண்டுமானால், 'வடைகளைத் தின்பதற்குப் பதிலாக அதிலுள்ள துளைகளை எண்ணுதல்' எனலாம்.

ஆனால், அமைச்சராயிருந்து அரசியல் வாதியாகவும் இருக்கும் சுப்பிரமணியத்தின் போக்கினை, எப்படி அழைப்பது என்று புரியவில்லை!

'மலையைத் தூக்கி என் தலையில் வையுங்கள்; பின், தூக்குகிறேனு இல்லையா என்று பாருங்கள்' என்று கூறியவன் கதையாக இருக்கிறது—அவர், மொழிப் பிரச்சினை பற்றி சென்னை—வண்ணைக் கூட்டமொன்றில் பேசியிருப்பது!

இந்தி மொழி பற்றி அவருக்கே ஒரு நிலையான கொள்கை இருந்ததில்லை! அதற்கும் மேலாக, அவருக்கும் காங்கிரசுக்கும் இடையேயும் ஒரு தெளிவான போக்கு இல்லை!

இதற்கிடையில்,

"நான்கு முறைகள் முயன்று பார்த்தேன்—அண்ணுதுரையுடன் மொழிப் பிரச்சினை பற்றி பேசுவதற்கு; ஒவ்வொரு சமயமும், 'சந்தர்ப்பமில்லை' என்று கூறி ஒதுக்கிவிட்டார்" எனப் பேசியிருக்கிறார் சுப்பிரமணியம்.

மொழிப் பிரச்சினை பற்றி பேச சுப்பிரமணியமோ, அண்ணுவோ, வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்தவர்களல்லர்!

பொதுவாழ்க்கை துவங்கியதிலிருந்து ஒருவரையொருவர் அறிந்தவர்கள்!

அண்ணுவின் மொழிக் கொள்கை என்ன என்பது, சுப்பிரமணியத்துக்குத் தெரியும்!

சுப்பிரமணியத்தின் மொழி பற்றிய கருத்து என்ன என்பது அண்ணு அறிந்ததே!

இதில், புதிதாகச் சந்திப்பதன் மூலம் சுப்பிரமணியம்—தனிப்பட்ட முறையில்—என்ன சாதித்துவிட முடியும் என்பது தெரியவில்லை! தெரிவிக்கப்படவுமில்லை!

தனி மனிதராகச் சந்திக்க விரும்புகிறாரா? தமிழராகச் சந்திக்க விரும்புகிறாரா? காங்கிரசுக்காரராகச் சந்திக்க விரும்புகிறாரா? தமிழகக் காங்கிரசுக்காரராகச் சந்திக்க விரும்புகிறாரா? இந்திராவின் பிரதிநிதியாகச் சந்திக்க விரும்புகிறாரா?—இதில் எந்த வகையானவராக தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொண்டு சுப்பிரமணியம், அண்ணுவைச் சந்திக்க விரும்பியிருக்கிறாரென்பதையும் அவர் சொல்லியிருக்க வேண்டும்.

வடைகளைத் தின்பதைவிட்டு, துளைகளை எண்ணியவன்போல 'அண்ணுவைச் சந்திக்க விரும்பினேன்—முடியவில்லை' என்று 'சைட் லீட்' வினாவுகளை மட்டும் ஏற்படுத்த விரும்புகிறாரே தவிர, உண்மையிலேயே மொழி விவகாரத்துக்குத் தீர்வுகாண விரும்புபவராகக் காட்டிக் கொள்ளவில்லை!

அவர் அவ்வாறு பேசியிருந்ததால்தான், பேசியது அண்ணுதையும் விட்டுவிட்டு, 'சுப்பிரமணியம் முதலமைச்சரைச் சந்திக்க முடியவில்லை' என்ற செய்தியை மட்டும் பிரசுரித்து, அகாவசியமான வாக்குவாதங்களுக்கு வழி வகுத்திருக்கிறது, ஓர் ஆங்கில நாளிதழ்!

'சந்திப்பு'தான் முக்கியமென்று சுப்பிரமணியம் கருதுவாராஞல், அவருக்கு அந்தக் குறையையும் தமிழக அமைச்சரவை வைக்கவில்லை!

பதவியேற்பு சமயத்தில் முதலமைச்சர் அண்ணுவும், உணவு அமைச்சர் மதியழகனும் அவரைச் சந்தித்திருக்கின்றனர்—'பழைய அமைச்சராயிற்றே' என்ற பொது அடிப்படையில்!

"சுப்பிரமணியத்துக்குச் சந்திப்பு நேரம் ஒதுக்குவதனுல் மொழி விவகாரம் தீர்வு காணப்படும்; அல்லது ஒரு சுமூக நிலைக்கு வரும்" என்ற உறுதிப்பாடு இருந்திருந்தால், அதைச் செய்வதில் அண்ணு அவர்கள் யாருக்கும் இரண்டாமவர் அல்லர்!

★ மொழி பற்றிய தமிழக அரசின் குறிப்பு—

★ இந்திராவுடன் சுக்ரித்து இருமுறைகள் பேசியது—

★ அதை அல்லாமல் பல செய்தியாளர்கள் கூட்டத்தில் வலியுறுத்தியது—

★ மதுரை பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையில் மொழிபற்றிக் குறிப்பிட்டிருப்பது—

ஆகிய அனைத்தும், தமிழகத்தைப் பிரதிபலிக்கும் அண்ணு அவர்களின் மொழி விவகாரம் பற்றிய கருத்துக்கள்!

இதற்கும் மேலாக, அண்ணு அவர்களிடம் நேராகப் பார்த்து என்ன பெற முனைக்கிறார் சுப்பிரமணியம்? அல்லது என்ன திட்டம் தர இருக்கிறார் முன்னுள் மத்திய அமைச்சர்?

மொழி விவகாரம் குறித்து சாகளா வெளியேற்றியபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு அறிக்கையைத் தந்தபோது, அண்ணு அவர்கள், முதலில் தந்த ஓர் இரத்தினச் சுருக்கமான கருத்தில்,

> "மூன்பு சுப்பிரமணியமும் அளகேசனும் செய்ததுபோல் சாகளா விவகாரத்திலும் சரித்திரம் திரும்பாமல் இருக்கட்டும்"

என்று கூறியது, சுப்பிரமணியத்தின் குற்ற முள்ள நெஞ்சின் உறுதியிருக்க வேண்டும்!

அச்சே சரிசெய்ய, 'சந்திக்க முயன்றேன்; 'முடியாது' எனச் சொல்லிவிட்டார்' என்று பேசியிருக்கிறார்—இராஜினமாக் கடிதத்தைக் கொடுப்பதுபோல கொடுத்து, திரும்பப் பெறுகிறாண்ட சுப்பிரமணியம்!

★ அவர் முன்பு, 'இராஜினமா'வைக் கொடுத்ததாலும் தமிழ் மொழிக்குச் சாதகம் வந்துவிடவில்லை!

★ இராஜினமாவைத் திரும்பப் பெற்றுக் கொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டாலும் இந்தியின் மூலம் வந்த பாதகம் போய்விட வில்லை!

இத்தகைய சுப்பிரமணியத்துடன், தமிழகத்து முதலமைச்சர் பேச என்ன இருக்கிறது?

மொழிப் பிரச்சினையைத் தாங்கிக்கொண்டிருப்பது சுப்பிரமணியம்தான் என்றால், கோபி மக்கள் அவரை மறந்திருப்பார்களா?

இராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு பறவை இருக்கிறது—'டிட்டோரி' என்ற பெயரில்!

அது இரவில், முதுகுப்புறம் படுத்து கால்களை ஆகாயத்தை நோக்கி நீட்டிக்கொண்டு தூங்குமாம்!

அதற்கான காரணம் என்ன கூறப்படுகிறது தெரியுமா?—'ஒருவேளை ஆகாயம் இடிந்து விழுந்தால் நமது முகுது எலுப்பு பூமியையாவது நசுங்கிவிடாமல் காப்பாற்றுவோமே' என்ற சமூக மனப்பான்மைதானும்!

★ சுப்பிரமணியம் முயலுவதானலும் மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுவிட முடியாது!

★ சும்மா சும்மா இருந்துவிட்டாலும், அதனுல் தமிழகம் பாதிக்கப்பட்டுவிடாது!

★ ஏனெனில், இந்தி மொழிபற்றி சுப்பிரமணியம் உண்மையான அக்கறை கொண்டிருப்பது உண்மையானுல், இதுபோன்ற சில்லறைச் செய்திகளுக்கு மேடை முக்கியத்துவம் கொடுத்திருக்க மாட்டார்!

—எஸ். ஆர்.

தேர்தல் வழக்குகள்: விரைந்து முடிக்கப் புதிய யோசனை

லக்னே, செப். 30—தேர்தல் வழக்குகளை விரைவில் முடிப்பதற்கு, கனடியப் பாணியிலான ஒடடு மறு எண்ணிக்கை முறையைக் கையாளலாம் என்று மத்திய அரசுக்குத் தேர்தல் ஆணைக் குழு யோசனை கூறும் என்று நம்பகமான தகவல் ஒன்று கூறுகிறது.

கனடிய முறைப்படி தேர்தல் வழக்கு மனுக்கள், தேர்தல் முடிவடைந்த 7நாட்களுக்குள் மாவட்ட நீதிபதிகளுகும், தேர்தல் ஆணைக் குழுவுக்கும் அனுப்பப்படுகின்றன. மாவட்ட நீதிபதி ஒட்டு மறு எண்ணிக்கைக்கு ஆணை பிறப்பிப்பார்.

தேர்தல் ஆணைக் குழுவின் மேற்படி யோசனையை மத்திய அரசு ஏற்றல், அதற்கான திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படலாம்.

கடந்த பிப்ரவரியில் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு உத்தரப் பிரதேசத்தில் 48-க்கும் மேற்பட்ட தேர்தல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அககாபாத் உயர் நீதிமன்றத்தில் இதுவரை ஒரு தேர்தல் வழக்குகூட முடிவடைய வில்லை.

பெரும்பாலான வழக்குகளில் சாட்சியம் பதிவு செய்யகூட ஆரம்பமாகவில்லை.

புனிதமான பத்திரிகைத் தொழிலில் கீழ்த்தரச் செயல்கள்

ஒழிப்பதற்கு கடுந்தண்டனை இன்றியமையாதது

'ஃபிரீட்ஸ்' ஆசிரியருக்குத் தண்டனையளித்த நீதிபதியின் கருத்து

நாகபுரி, செப். 30—

பம்பாயிலிருந்து வெளிவரும் 'ஃபிரீட்ஸ்' ஆங்கில வார இதழின் ஆசிரியராள திரு. ஆர். கே. கரஞ்சியாவுக்குச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப் பட்டன.

தம் பத்திரிகையில் ஓர் இளம் பெண்ணின் நடனக் காட்சியை அருவருக்கத்தக்க தோற்றத்தில் வெளியிட்டு, அதன்மூ இளைஞர்களின் மனத்தைக் கெடுக்கக் கூடிய வகையில் விளக்கக் குறிப்பு எழுதியிருந்ததாகக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

அப்துல் ஜப்பார் தாஜ் என்பவர் இந்த வழக்கைத் தொடுத்திருந்தார்.

"நாகபுரி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் இந்த வழக்கில் சாட்சிப் படுஞல்ல குற்றத்தை உறுதிப்படுத்தி, திரு. கரஞ்சியாவுக்கு ஒரு மாத வெறுங்காவல் தண்டனையும் ரூ. 2000 அபராதமும் விதித்தார்; அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் மூன்று மாத வெறுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

"புனிதமான பத்திரிகைத் தொழிலிலிருந்து கீழ்த்தர மான சுவையூட்டும் செயல்களை வீரட்டுவதற்குக் கடுந் தண்டனை இன்றியமையாதது; எவ்வளவு அபராதம் விதித் தாலும் அதை எதிரியினுல் எளிதில் செலுத்திவிட முடியும். அபராதம் விதிப்பதனுல மட்டும் எதிரியிடமிருந்து வித விதமான வேலையும் ஏற்படுத்தி விட முடியாது.

"மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் பொருட்டுச் சிறைத் தண்டனை விதிப்பது நீதியை நிலைநாட்டுவதற்கு இன்றியமையாதது ஆகும்"

என்று, மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

பக்தவத்சலம் போட்ட உத்தரவு மாற்றப்படுகிறது!

மீண்டும் தமிழில் 'காவல் நிலையம்'!

திருச்சி, செப். 30—

போலீஸ்துறை தொடர்பாகத் தமிழ்ப் பெயர்ப் பலகை வைக்குமாறு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

'போலீஸ் ஸ்டேஷன்' என்பதற்கு —'காவல் நிலையம்' என்றும், 'ரான்ஸிட்' என்பதற்கு—'காவலர்' என்றும், 'போலீஸ் கேன்' என்பதற்கு—'காவலர் இல்லம்' என்றும் எழுதவேண்டும்.

"தமிழ்ப் பெயர்களுக்கு மீழே ஆங்கிலப் பெயர்களும் எழுதப் படலாம்" என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

'ஏற்கனவே, 'போலீஸ் நிலையம்' என்பதற்கு, 'காவல் நிலையம்' என்று எழுதப்பட்டதை' காங்கிரசு மு தல மை ச் ச ர் பக்தவத்சலம் மாற்றி, 'போலீஸ் நிலையம்' என்றே எழுதவேண்டும் என்று உத்தரவிட்டது நினைவிருக்கலாம்.

வெளிநாட்டு உதவி வேண்டாம்

நிபுணர்கள் வற்புறுத்தல்

புதுடில்லி, செப். 30—

"அயல்நாட்டு உதவியை நம்பி நிற்பதைக் கைவிட வேண்டும்" என்னும் பழைய கோரிக்கையை, திட்டக் குழுவில் உள்ள நிபுணர்கள் மீண்டும் கூற ஆரம்பித்துள்ளனர்; 'அதை உடனடியாகச் செய்ய முடியாவிட்டால், அயல்நாட்டு உதவியின் அளவையாவது குறைத்துக்கொள்ள வேண்டும்' என்று அவர்கள் கருதுகின்றனர்.

நவம்பரில் தேசிய வளர்ச்சிக் குழு கூடும்போது இக்கருத்துக்கள் வெளியிடப்படும் என்று விவரமறிந்த வட்டாரங்களை கூறுகின்றன.

"வெளிநாட்டு அரசுகளின் பொருளாதார உதவியை நம்பியிருத்தலானது, நாட்டின் மனத் தெம்பைப் பாதிக்கு, அதன் தரத் தைக் குறைத்திருப்பதுடன், ஜனக முயற்சிகளைப் பாதித்துள்ளது" என்று, அங்கிய உதவியை எதிர்ப் போர் கூறுகிறார்கள்.

"நடைமுறையில் பார்த்தால், உள்நாட்டு தொழிற்துப் அறிவை நாட்டின் தொழிலதிபர்கள் மட்டு மன்றி அரசும் பயன்படுத்தாமல் ஒதுக்கித் தள்ளுகிறது" என்று அந்த நிபுணர்கள் கூறுகின்றனர்.

எனவே, இந்திய நிபுணர்களின் தி ற ன் பயன்படுத்தப்படாமல், 'வெளிநாட்டு நிபுணர்கள், அரசுக் கள் ஆகியவைதான் கதி' என்னும் நிலே உள்ளது.

எனினும், அங்கிய உதவி பெறு வதைக் கைவிட வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அமைச் சரவையின் முதிய உறுப்பினர்கள் எதிர்க்கக்கூடும்.

"அங்கிய உதவி நமது கொரு வத்துக்குக் கு த் த மி ல் லா ம ல் கிடைக்கிறவரையில் அதை 'நாட் டின் தொழில் முன்னேற்றத்துக் கு ப் யீனபடுத்திக்கொண்டாக வேண்டும்" என்று அவர்கள் கூறுவர்.

காங்கிரசுத் தோழர்கள் காமராசர் பார்வைக்குக் கொண்டு வருவதற்காக:

தடையும் விடையும்!

"உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தமிழக அரசாங்கம் தடையாக இருக்கிறது. தி. மு. க. அரசாங்கத்தில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் நில இல்லே. கட்டுப்படியாகும் நிலேயில் கொள்முதல் விலே இருந்தால்தான், விவசாயிகள் உற்சாகத்தோடு வேலே செய்து உற்பத்தி பெருக்குவார்கள்.

"காங்கிரச அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்தது. அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பம்பு செட்டுகள் அமைப்பதற்கு—கிணறு தோண்டுவதற்கு—மாடுகள் வாங்குவதற்குப் 'பணம் தடன் கொடுத்தது.'

—திருவில்லிபுத்தூர். வெகாரி வட்டங்களின் காங்கிரசு ஊழியர் கூட்டத்தில் அ. இ. கா. தலேவர் காமராசர்.

பாரவம்! அவருடைய குருவுளிச் சுற்றுப்பயனத்தில், பத்திரிகை 'பார்க்க' நேரம் இருக்கிறக்காது என்பதாலே, 27—9—67 மாலே—28—9—67 காலே நாளிதழ்களில் வெளிவந்த கீழ்க் கண்ட செய்தியை, காங்கிரசுக்காரர்கள் அவர் கண்ணில் காட்டவேண்டும் என்பதற்காகவே இத்தாத் தனியே வெளியிடுகிறேம். ஏனெனில், நாட்டில் நடப்பது என்னவென்று தெரியாமல அவர் இனியும் உளறிக் கொண்டிருக்க வேண்டாம் அல்லவா?

"விவசாய விலேக் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் தான் இப்பிரச்னேயை மத்திய அரச ஆராய்ந்துள்ளது. பிரதந் நியத்துக்குப் பிரநந்நியம், தரத்தையொட்டி நெல் அல்லது அரிசி ரகங்களின் வில மாறுபடும் எண்பதையும் மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. தமிழக அரசின் கொள் முதல் விலேகள் மத்திய விவசாய விலேக் கமிஷன் வகுத் தளித்த விதிதங்களின்படிதான் உள்ளன.

"காங்கிரசுத் தலேவர் காமராசரும், நிழக்கிழார்களும் கொள் முதல் விலேயைக் கூட்டிட வேண்டும் பேரி வருகிறார்கள்; ஆனல், நிலக்கிழார்களும் அரசும் கூடிய பேரில பின்னரே தமிழ்நாட்டில் கொள்முதல் விலேகள் வரையறுக்கப்பட்டன எனபதை அருள்கூர்ந்து நினேவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

"உற்பத்தியாளருக்குப் பரிந்து பேசுவோருக்கு ஒன்று கூறவேள்—இரசாய உரங்களின் விலேகளேக் குறைக்க வும், மானிய உதவியை மீண்டும் தரச் செய்யவும் மத்திய அரசை வற்புறுத்துவேன்; மேலும், உழவர்களுக்கு அதிக அளவு தாராளமாகக் கடன் தரப்படும்; அதிக அளவு பாசன வதிகள் பம்பு செட்டுகள் போன்றவை தரப்படும்; இந்த உதவிகள் பணமாக இரா—பொருள்களாக இருக்கும்."

---முதலமைச்சர் அண்ணு

இதற்குப் பிறகும் காமராசர் தாம் சொல்வதையே கிளிப்பின்னியாகச் சொல்லிக் கொண்டிருந்தால், அவரைப் பற்றி எப்படி மதிப்பிடுவீர்களோ, அது உங்கள் விருப்பம்!

பூ! பூ! பூ!

"மேற்கு வங்காளம் பற்றிய நக்ஸா திட்டத்துக்கே கடைசியில் காமராசர் அடிபணிந்தார்" என்ற செய்தியை வைத்து வேடிக்கை செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட தலேப்பு அல்ல!



உண்மையில், திருவில்லிபுத்தூரில் காமாசர் பேசியுள்ள பேச்சின் ஒரு பகுதிக்குத் தக்கதான தலேப்பு இது!

காமராசரின் 'பூ' பற்றிய பேச்சினை விமர்சனம் செய்யலாம்; ஆனல் அவர் பேசி சில நாட்கள் ஆகிவிட்டன!

தோட்டாலே வதங்கிலிடும் பூ! எனவே, 'தோடா'மலே தந்திருக்கிறேம் —வாசகர் சிந்தனேக்காக!

"திட்டங்கள் காரணமாகப் போக்குவரத்து மார்க்கங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. சாலேப் போக்குவரத்து மட்டுமன்றி இரயில் போக்குவரத்து மட்டுமலலாமல் விமானப் போக்குவரத்தும் முன்னேற்றமடைந்திருக்கிறது.

"மதுரையிலிருந்து பூக்கள், விமான மூலம் டில்லிக்கு அனுப்பப் படுகிறது; காலேயிலே அனுப்பப்படுகின்ற பூ, மாலேயிலே டில்லியில் விற்பனைக்குக் கிடைக்கிறது. இங்கே ஒரணுவுக்கு விற்கிற பூ, அங்கே பத்தணுவுக்கு விற்பனையாகிறது—நல்ல இலாபம் கிடைக்கிறது.

"பூ, நல்ல இலாபம் தரக்கூடிய தொழிலாக இருப்பதால் பூ விளேச்சலுக்கு அதிகம் செய்யலாம்."

இது, காமாசர் திருவில்லிபுத்தூரில் பேசியது! ஒருவேளை, பூக்காரர்கள் மத்தியில் பேசினரோ என்னவோ—ஒரே மலர் மணம் வீசுகிறது!

முன்பு சேலத்தில், 'நூல், நூல்' என்று காமராசர்—நெசவாளர் கள் மத்தியில்—ஆராய்ச்சியில் இறங்கியது கவனமிருக்கலாம்.

இப்போது, 'பூ! பூ!' என்று பூக்காரர்கள் மத்தியில் 'நார்' கொடுத்திருக்கிறார் போலிருக்கிறது!

அடுத்து யார் கிடைக்கிறார்கள் எனப் பொறுத்திருந்து பார்ப் போம்!

—'பாக்சர்'

புதிய பெயரில் உருவாகும் அ.இ.காட்சி

உறுப்பினர்கள் மது அருந்தத் தடை

லக்னே, செப். 30—

புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'அகில இந்திய கிராந்தி தள்'தின் —அதாவது இராஷ்ட்ரிய ஜன காங்கிரசின்—உறுப்பினர்கள், 'மது அருந்தக் கூடாது' என்று தடைவிதிக்கப்படும்.

அக்கட்சியின் அமைப்புத் திட்ட விதிகளடங்கிய ஏராளமான, இம் மாதக் கடைசியில் இந்தூரில் ஆராயப்பட்டு வேலேவேற்றப்படும். அந்த நகல் சாசனத்தில் மேற் குறித்த விதி சேர்க்கப்பட்டுள்ளது.

இராஷ்ட்ரிய ஜன காங்கிரசில் அடங்கிய ஜன காங்கிரசு—பங் காளர (வங்காள) காங்கிரசு—ஜன கிராந்தி தளம் ஆகியவை இந்தூரில் அக். 27-ந் தேதியிலிருந்து 29-ந் தேதிவரை கூடி விவாதிக்கும்.

அக்கட்சிகள், புதியதான அந்த அகில இந்தியக் கட்சிக்கான பெயரையும் தீர்மானிக்கும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் எதிர்காலம்

மத்திய அரசுக்கு அண்ணு கூறும் யோசனே

பெங்களூர், செப். 30—

"நாடு முழுமைக்குமான ஒரே மாதிரியான திட்டதை உருவாக்கி, அதனப் படிப்படியாக நிறைவேற்றுகிற நில ஏற்படும் வரை, சமுதாய வளர்ச்சி பஞ்சாயத்து நிறுவனங்களே தொடர்பான திட்டங்களில் அவசரப்பட்டு எவ விதி நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டாம்"

என்று மாகில அரசுகளே மத்திய அரசு கேட்டுக்கொண்டிருப்பதாக உணவு — வேளாண்மைத்துறை தூணேயமைச்சர் திரு. குருபாத சாமி செய்தியாளர்களிடம் தெரி வித்தார்.

இது தொடர்பாக, 'எல்லா மாகில முதலமைச்சர்களேயும், சமுதாய வளர்ச்சி — பஞ்சாயத்துத் துறை அமைச்சர்களேயும் அதிகாரச் சார்பற்ற முறையில் கூடிப் பேச வேண்டும்' என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

நாட்டின் கிராமப்புற வளர்ச்சி தொடர்பாக அ ர சின் நகல் கொள்கை அறிக்கை மாகில அரசுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினர்.

சில மாகிலங்கள் ஏற்கனவே பதிலளித்துவிட்டன என்றும், மற்ற மாகிலங்களின் கருத்துக்களே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் குருபாதசாமி கூறினர்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தி லிருந்து தப்பித்துக்கொள்ள இயலாது என்பதைப் பலவேறு மாகிலங்களும் உணர்ந்துவிட்டதாகவும், நாடு முழுமைக்குமான ஒரு முடிவு செய்யப்படும் வரையில் இத் திட்டங்களேச் செயல்படுத்தலாம் இருக்க ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கூறினர்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவி

வேலு நூல் வழங்கினர் அமைச்சர்

சென்னே, செப். 30—

கடந்த ஞாயி முதல் நாள் இராயபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தலேக்கு நாலான நூலும் பருத்தி நூலும், மீன் பிடிக்கும் பிற சாதனங்கள் வாங்குவதற்குரிய பணமும் வழங்கினர் அமைச்சர் திரு. கோவிந்தசாமி.

மாகில அரசு ஏற்கனவே இத்தத் தீவிபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்காக ரூ. 2000 அனுமதித்துள்ளது.

மூன்னர்

தொழில்நுட்ப அறிவை பயன்படுத்தத் தயங்கினர்!

இன்று தீவிரம் காட்டுகின்றனர்

இந்தியாவின் உணவு உறபத்தியைப் பெருக்க உதவி அளிப்பதோடு, கும்பகக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கும் உதவி அளிப்பதற்கு இந்தியா—அமெரிக்கா இடையே ஒரு தொழில் நுட்ப ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னேறி வருகின்றன.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் கும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட வேலே களுக்கு 80 இலட்சம் டாலர் கிடைக்கலாம் என்று விஷய மறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன; இதில், அமெரிக்கத் தொழிற் சாலேகள் 15 இலட்சம் டாலர் மதிப்புக்கு அளிக்கும் கருத்தடைச் சாதனங்களும் அடங்கும்.

தவிர, அந்த உதவியின்கீழ் மக் களுதொகை ஆய்வு நிபுணர்களின் உழைப்பும் அளிக்கப்படும். கருத் தடைத் திட்ட வேலேகளே வகுக்க வும், அவற்றை அமுல்படுத்தவும், மாகிலங்களின் தலேமைகளுக்குப் பல நிபுணர்களை அனுப்பிவைக்கப் படுவர்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத் தில அமெரிக்க அறுபவத்தையும், தொழில நுப அறிவையும் பயன் படுத்துவதற்கு இந்தியா முன்னர் காட்டிய தயக்கம் இப்போது மறைந்துவிட்டதாகவும், இப்போது மாகில அரசுகள் அப்பரச்சினையில் உதவிபெறத் தீவிர அக்கறை காட்டுவதாகவும் அமெரிக்க வட்டாரங் கள் கூறுகின்றன.

தீயும் தீர்மானமும்!

வானிலை ஆராய்ச்சிசாலியின் அதிகாரிகளைக் கலந்து கொண்டு—மழை வரக்கூடிய கோட்டத்தையொட்டி—'வருண ஜெபம்' செய்யும் பூசாரிகளை இந்த நாடு மெத்தவும் கண்டிருக்கிறது!

அதேபோல், நாடு போகும் போக்கைப் பார்த்து, அதன் ஒட்டத்திற்கேற்ப தீர்மானம் போடும் காங்கிரசுக் கட்சியினரை இன்று நாம் பார்க்கிறோம்!

சென்னை தியாகராய நகரில் கூடிக் கலங்த காங்கிரசார், குடிசை வாழ்வோர் பற்றி வடித்த முதலைக் கண்ணீரை, இந்த நூற்றாண்டின் அரசியல் கேலிக்கூத்துக்களில் ஒன்றுக்குக் கொள்ளலாம்!

'குடிசைகளுக்குத் தீ வைத்த கொடியவர்கள்' எனச் சிலரைப் போலீசுப் புலன் விசாரணையில் அடையாளம் கண்டு, அவர்கள் பேரில் முறைப்படி வழக்கும் தொடரப் பட்டுள்ளது. 'தீ வைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளோர், காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள்' எனவும் போலீசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காங்கிரசார், குடிசை தீப்பற்றி எரிந்ததைப் பற்றிப் புலம்புவது வேடிக்கை அல்லவா?

எரிந்த குடிசைகளுக்குப் பதிலாக இனி என்றும் தீப்பிடிக்காத வீடுகளாகக் கட்டிக்கொடுப்பதற்குக் கழக ஆட்சி வேகமாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பது ஊருக்கும் உலகுக்கும் தெரிந்ததே! ஆனாலும், வெறுப்பு—புறஞ்சொல்லுதல்—அற்பத்தனம்—சிறுபிள்ளைத்தனமான வாதம் ஆகியவைகளின் அடிப்படையிலேயே கழகத்தின்—கழக ஆட்சியின் செயல்களின் அனுகும் காங்கிரசுக் கட்சியினருக்கு, எரியாத வீடுகள் வேகமாகக் கட்டப்பட்டுவரும் கழக ஆட்சியின் சாதனை கண்ணுக்குத் தெரியவில்லை—கருத்துக்கு எட்டவில்லை!

ஆகவேதான், தியாகராயநகர் தெருக்கூத்தில் தீர்மானம் என்பதாகக் குடிசைகளைப் பற்றியும் கூச்சல் எழுப்பியிருக்கின்றனர்!

எரிந்துபோன குடிசைகளுக்கும் பதிலாக உடனடியாக வீடு கனிக் கட்டித் தரவேண்டுமாம்! தென் சென்னைப் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல், காங்கிரசுக்காரர்களுக்குக் குடிசைவாழ் மக்களின் மேல் எவ்வளவு கருணையை உருவாக்கி மிருக்கிறது பார்த்தீர்களா?

'குழந்தையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது' என்பது பழமொழி. காங்கிரசவாதிகள் குடிசைகள் எரிந்ததைப் பொறுத்து குழந்தைகளைக் கிள்ளிவிட்டார்கள்; ஆனால் தொட்டிலே ஏன் வேகமாக ஆட்டவில்லை என்று கழக ஆட்சியை நோக்கிக் கேட்கிறார்கள்!

தென் சென்னைப் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல், காங்கிரசுக்காரர்களை இன்னும் எவ்வளவு கேலித் தனமான செயல்களைச் செய்வோராகக் காட்டப்போகிறதோ?

எரிந்த குடிசைகள் பற்றி வெறும் தீர்மானம் போட்டு ஒப்பாரி வைக்கும் இவர்கள், இதுவரை எரிந்துபோன குடிசைகளுக்குப் பதிலாகத் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தர அரசு முனைந்திருக்கும் முயற்சிக்கு அளித்த ஆதரவென்ன? கொடுத்த நிவாரண நிதி எவ்வளவு?

தீர்மானம் போட்டே கீலிக்கண்ணீர் வடிக்கும் காங்கிரசு வாதிகள் தயவுசெய்து பதில் சொல்வார்களா?

சென்னை மாவட்டக் காங்கிரசுக் கட்சி, தீவிபத்து நிவாரணத்திற்காக அளித்த நன்கொடை எவ்வளவு?

தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி இது சம்பந்தமாக எடுத்துக் கொண்ட செயல்பூர்வமான முயற்சி என்ன?

தியாகராயர் நகர் தெருக்கூத்தில் பகல் வேடம் போட்டு ஆயிய காங்கிரசுப் பிரமுகர்களில் எத்தனோ பேர் குடிசை வாழ் மக்களின் நிவாரண நிதிக்காக முதலமைச்சரிடம் தொகை அளித்திருக்கின்றனர்?

காங்கிரசுக் கட்சி அமைப்புகள் திரட்டித்தந்த தொகை எதாகிலும் உண்டா?

காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் முயற்சி செய்து திரட்டிய தொகை எதாவது அளிக்கப்பட்டிருக்கிறதா?

நிதி அளித்திருந்தால்தான் அதுபற்றிக் காங்கிரசார் வாய் திறக்கவேண்டும் என்று நாம் வாதிடவில்லை; ஆனால், ஒத் துழைப்பு முயற்சியில் ஒரு சிறிதும் அக்கறை காட்டாமல், இடைத் தேர்தலில் ஓட்டுப் பெறுவதற்காகவே இப்படிப் பேசுவானேன்?

குடிசைவாழ் மக்களை, காங்கிரசாரின் கீலிக் கண்ணீர் ஏமாற்றிவிட முடியாது! செயல் முலமாகவே யாரையும் எடை போட்டுப் பார்த்துக் கணிக்கும் அவர்களுடைய ஆதரவும் அன்பும் இனி ஒருகாலும் காங்கிரசுக்காரர்கள் பக்கம் சாயுமென்பது சத்தியக் கோட்பே!

காங்கிரச ஆட்சியின்போது போலீசாரின் அடக்குமுறையும், அதிகார கொடுமையும் சென்னை நகரக் குடிசைவாழ் மக்களிடத்தில்தான் கொடிகட்டிப் பறந்தது என்பதை அவ்வளவு விரைவாக அந்த மக்கள் மறந்துவிட மாட்டார்கள்!

தீயினுல் தீயவர்கள் சுட்ட புண்களைக் காட்டிலும், குடிசைவாழ் மக்களைக் காங்கிரசு ஆட்சியின்போது போலீசார் நாவினுல் சுட்ட வடுக்கள், மாறுதலை—மறையக் கூடாதவை!

—தோழன்

இவர் யார் தெரிகிறதா?

உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்; ஆனுல், அவரே கூறுவதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

அதனை நாளை (அக். 4) 'நம் நாடு' இதழில் ஆராய்கிறார் 'திருவாளர் சந்தேகம்!'

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

அக். 4 காலை 10 மணி: மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; செங்கற்பட்டு மாவட்ட வட்டார முன்னேற்ற அதிகாரிகள்—ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாகாடு; மாலை 3 மணி: பக்கவெல்ல உற்பத்தியாளர் தொழில் வளர்ச்சிக் கருத்தரங்கம்.

அமைச்சர்

சாதிக் பாட்சா

டில்லி பயணம்

தமிழக நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, இன்று முதல் அக். 5-ம் நாள்வரை டில்லியில் நடைபெறும் பதினுன்காவது மத்திய நலக் குழுக் கூட்டத்திலும், அக். 6, 7-ம் நாட்களில் நடக்கும் மத்திய நான்காவது குடும்பக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்திலும் கலந்து கொண்டுவிட்டு அக். 8-ம் நாள் சென்னை வந்தடைவார்.

ஸ்ரீ ஜோதி வேல்ட் பேப்பர் கம்பெனி

21, அண்ணுபிள்ளை தெரு, சென்னை-1.

தின, வார, மாத வாசித்த பத்திரிகைகளை நியாய விலைக்கு வாங்கி, மலிவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

சென்னை குடிசைவாழ்வோர் தீ விபத்து நிவாரண நிதி அளிப்பு விழா

சென்னை பல்கலைக்கழகக் கலையரங்கில்

4—10—67 புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு

மாண்புமிகு முதலமைச்சர்

அறிஞர் அண்ணு

அவர்கள் தலைமையில்

நிரைப்படக் கலைஞர்கள் அளிக்கும்

★ கலை விழா ★

இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் கலைஞர்கள்:

டி. கே. எஸ். சகோதரர்கள் — ஜெயலலிதா
எஸ். எஸ். இராசேந்திரன் — ஹேமா மாலினி
அசோகன் குழுவினர்
'சோ' — மனோரமா
தங்கவேலு, டி. எஸ். பாலையா — எம். சரோஜா
எல். ஆர். நடராசன் — சந்திரகாந்தா
தெய்வநாத் — ஓமனு

திரை இசைத் திலகம் கே. வி. மகாதேவன் குழுவினரின்

மெல்லிசை

டி. எம். சௌந்தரராஜன் — பி. சுசிலா
ஏ. எல். ராகவன் — ஜமுனு ராணி

கட்டணம்: ரூ. 50, 25, 10, 5, 2.

காட்சி முடிந்தவுடன் பஸ் வசதி உண்டு.

டிக்கெட்டுகள் கிடைக்கும் இடம்:

27, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

பல்கலைக்கழகக் கலையரங்கில் அக். 3, 4-ந் தேதிகளில் காலை 9 மணி முதல் மாலை 7-மணி வரை டிக்கெட்டுகள் கிடைக்கும்.

கழகச் சட்ட திட்டத் திருத்தம்

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

1967 அக்டோபர் 14, 15 ஆகிய நாட்களில் சென்னையில் கூடும் பொதுக்குழுக் கூட்டத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட விருக்கும் கழகச் சட்ட திட்டத் திருத்த நகல், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அனுப்பப்பட்டுள்ள சட்ட திட்டத் திருத்த நகலில் மேற்கொண்டும் ஏதாவது திருத்தம் தேவையெனக் கருதும் பொதுக்குழு உறுப்பினர், தாம் கருதும் திருத்தத்தைத் தெளிவாக லிதி—பிரிவுகளைக் குறிப்பிட்டு எழுதி, 9—10—67-ஆம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்குக் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். வி. நடராசன்,
அமைப்பாளர்,
கழகச் சட்ட திட்டத் திருத்தக் குழு

இவர் ஒரு முன்னுள் முதலமைச்சர்—பேசியிருப்பது 'பொறுப்புள்ள' பேச்சு?

"நான் சென்று இருந்த அந்த மாவட்டத்தில், மாவட்ட நீதிபதி, முதலமைச்சரை, பகல் உணவிற்கு அழைத்தார்; மாலை 6½ மணிக்கு சாப்பாட்டை எல்லாம் முடித்துக்கொண்டு வந்தாராம்! அதுவரையில் எல்லோரும் காத்துக்கொண்டு இருந்தார்களாம்!

"இது, உண்மையாகவும் இருக்கலாம்: பொய்யாகவும் இருக்கலாம்.

—காங்கிரச வழக்கறிஞர்கள் சங்கத்தில் எம். பக்தவத்சலம்

நாமும் அவரை, 'முன்னுள் முதலமைச்சர்' என்றும் கருதலாம்; 'ஒரு பொறுப்பற்ற மனிதர்' என்றும் கூறலாம்.

நடக்க இருப்பவை

4—10—67

முதுகுளத்தூர்

தி. மு. க. சார்பில் அமைச்சர் செ. மாதவனுக்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: எஸ். எஸ் தென்னரசு; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், தா. கிருட்டினன் எம்.ஏ., எம்.பி., மாங்குடி மதியழகன், மு. சாத்தையா எம்.ஏ., மு. கருமலையான், முதுவை முத்து அடிகள், கா. இராமசாமி, ஆர். எல். அலியார்.

5—10—67

அழிஞ்சமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: கே. பெத்தையன்; பேசுவோர்: சு. தியாகராசன் பி.ஏ.பி.எல், வே. இராசன், பொ. கணபதி, அ. அம்பலவாணன், இ. வெள்ளத்துரை, ஏ. கிருட்டினன், பி. கோவிந்தசாமி, ஆர். வி. கோவிந்தராசு. (முருகு பாண்டியன் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

குன்னத்தார் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

அக். 7: ஜோதிபுரம்; 8: உடுமலை; 12, 13: பழனி வட்டம்; 14, 15: சென்னை; 16, 17: பொள்ளாச்சி வட்டம்.

சோவியத் முன்னேற்றக் கழகத்திற்காக, இந்து இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அறிவுபவராகவும் கொண்டு, வடுவில் அச்சகத்தில் (24-ஆ குன்றுமுருகன் கோவில் தெரு, சென்னை-1) அச்சிடப்பட்டு, சென்னை-1-ல் இருந்து வெளியிடப்படுகிறது.